***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

**OS.No. 4/2018**

**P.W.1 திரு.மணி த/பெ.சுப்பையா நாள் – 18.03.2026**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு பொதுவான குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ.103 மற்றும் வா .சா.ஆ.104 ஆவணங்கள் 16.09.2017 ல் ஏற்பட்டுள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். நான் 2018 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.103 மற்றும் வா.சா.ஆ.104 ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீடு கட்ட முயற்சி செய்கிறார்கள் என்று காட்ட தாக்கல் செய்துள்ளேன். 16.08.2017 ம் தேதி அன்று கேவியட் மனு தாக்கல் செய்யும்போது வழக்கு அ–அட்டவணை சொத்தில் வீடு கட்டிக்கொண்டிருந்தார்கள் என்றும் , பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது வீடு கட்டி முடித்துவிட்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ.105, வா.சா.ஆ.106 மற்றும் வா .சா.ஆ.107 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான் . வா.சா.ஆ.105, வா.சா.ஆ.106 மற்றும் வா .சா.ஆ.107 ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல . வா.சா.ஆ.103, வா.சா.ஆ.104 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் என் கைவசம் இருந்த ஆவணங்கள் என்றால் சரிதான் . பின்னிட்டு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கத்தில் இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Additional District Judge,*
*Pudukkottai.*